**முன்னரே தயாரிக்கப்பட்ட இரும்புப் பாலங்களின் வழங்கல் மற்றும் நிருமாணச் செயற்திட்டம் - 2013**

முன்னரே தயாரிக்கப்பட்ட இரும்புப் பாலங்களின் வழங்கல் மற்றும் நிருமாணச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஸ்பானிய அரசாங்கத்திற்கும் இடையில் 2006 செப்டெம்பர் 04 இல் கைச்சாத்திடப்பட்ட 2006086/87 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்படுகிறது

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

முன்னரே தயாரிக்கப்பட்ட இரும்புப் பாலங்களின் வழங்கல் மற்றும் நிருமாணச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளது. திருகோணமலை - புல்மோட்டை வரையான வீதியில் இறக்கண்டி, புடைவைக்கட்டு மற்றும் ஜான் ஓயா ஆகிய புதிய பாலங்களை நிருமாணித்தல் மற்றும் சுனாமியால் சேதமாக்கப்பட்டிருந்த அல்லது அடித்துச் செல்லப்பட்ட ஓட்டமாவடி பாலத்தினை பதிலீடு செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகவுள்ளன. ஸ்பானிய அரசாங்கம் சலாப்பை பாலம், தொண்டமனாறு பாலம், ஒறியன் பாலம், தோப்பூர் பாலம் மற்றும் தம்பலகாமம் பாலம் என்பனவற்றை நிர்மாணிப்பதற்கு மேற்குறிப்பிட்ட கடனின் சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,228.54 மில்லியனாக உள்ளதுடன் அதில் யூரோ 21.627 மில்லியனிற்கு சமமான ரூபா 2,888.54 மில்லியன் அல்லது 89 சதவீதம் ஸ்பானிய அரசாங்கத்தினால் தியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2006 செப்டெம்பர் மாதத்தில் தொடங்கியிருந்ததுடன் 2010 யூன் 30 அளவில் பூர்தியாக்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. பின்னர், செயற்திட்டக் காலமானது 2010 திசெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட காலமானது 2015 திசெம்பர் 31 வரை மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்தநிதிக்கூற்றுக்கள் பொதுவாகக் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள்

பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாகக் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 8.92 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா. 3,626.7 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினத்தின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| மோட்டார் வாகனங்கள் | - | - | 5,222,893 |
| பூர்த்தியாக்கப்பட்ட சிவில் வேலைகள் | - | - | 3,585,994,566 |
| நடைபெறும் வேலை | 8,920,106 | 9,280,060 | 35,527,608 |
| | 8,920,106 | 9,280,060 | 3,626,745,067 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 522,893 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சொத்துக்கள் மாற்றம் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிசார் மீளாய்வு

செயற்திட்டத்தின் நிதியிடல் திட்டம் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பாவனை தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 உள்ளவாறான நிதிகளின் திரண்ட பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| | யூரோ மில். | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| ஸ்பெயின் அரசாங்கம் | 21.62 | 2,888.54 | - | - | 3,393.00 |
| இலங்கை அரசாங்கம் | - | 340.00 | 9.00 | 8.92 | 234.00 |
| மொத்தம் | 21.62 | 3,228.54 | 9.00 | 8.92 | 3,627.00 |

### 6.2 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட தொண்டமானாறு பாலத்தின் திறப்பு விழாவிற்காக செயற்திட்டத்தால் செலவழித்த ரூபா 1.52 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் வருடாந்த மதிப்பீடுகளில் எவ்வித ஏற்பாடுகளும் இருக்காத போதிலும் கிரயமாக கருதப்பட்டிருந்தது.

### 6.3 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 09 பாலங்களின் வேலைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட அமுலாக்கல் முகவர் செயற்திட்ட நடவடிக்கைகளை கணக்கொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.